ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2349/02 - 2023 සැප්තැම්බර් මස 11 වැනි සඳුදා - 2023.09.11

*2349/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 9/2005 (III)*

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

53 ஆம் பிரிவின்கீழான கட்டளை

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் மெரென்னகே பிரியந்த பெர்னாந்து ஆகிய நான், அதிகாரசபையின் விதப்புரையின்மீது, பின்வருவனவற்றை இக்கட்டளைமூலம் நிர்ணயிக்கின்றேன் -

(அ) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட விலைகள்; அவை கொழும்பு மாநகர சபை இடப்பிரதேச எல்லைகளினுள் சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின்கீழ் சுற்றுலாப்பயணிச் சேவையொன்றாக வகுதிப்படுத்தப்படுகின்ற சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றில் அறையொன்றை இருப்பாட்சிகொள்கின்றமைக்காகவும் ஒவ்வொரு இருப்பாட்சியாளருக்கும் வழங்கப்படக்கூடிய உணவுகளுக்காகவுமான விதிப்பனவுகள் தொடர்பில் அத்தகைய இருப்பாட்சியாளர்மீது சுமத்தப்படவேண்டிய, விதிக்கப்படவேண்டிய, அவரிடம் கோரப்படவேண்டிய அல்லது அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய குறைந்தபட்ச விலைகளாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள்; அவை, எந்த சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றின் உரிமம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட விலைகளுடன் இணங்கியொழுகாமை காரணமாக இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றை மீள் பதிவுசெய்தல் மற்றும் அதற்கு உரிமமளித்தல் தொடர்பாக அத்தகைய சுற்றுலாப் பயணி ஹோட்டலிடமிருந்து அறவிடப்படவேண்டிய குறைந்தபட்ச கட்டணங்களாகவிருத்தல் வேண்டும்.

இதற்கான அட்டவணை I மற்றும் II இல் குறித்துரைக்கப்பட்ட விலைகளும் கட்டணங்களும் 2023, ஒற்றோபர் 1 ஆந் திகதியிலிருந்து பயனுக்கு வருதல் வேண்டும்.

*2009, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 1622/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2011, மாச்சு 17 ஆந் திகதிய 1697/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகள் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.*

**தவிசாளர்,**
இலங்கை சுற்றுலாப் பயணத்துறை
அபிவிருத்தி அதிகாரசபை.

கொழும்பு,
*2023.09.08*

**அட்டவணை I**

வகுதி I

*1. கூட்டிணைப்பு மற்றும் கட்டற்ற சுயாதீன சுற்றுலாப்பயணி ஹோட்டல் அறைக்கான விலைகள் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் (ஐஅடொ) அல்லது அதற்குச் சமமான இலங்கை ரூபாவில் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-*

| | | | ஐஅடொ |
|---|---|---|---|
| 1.1 | ஐந்து நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 100 |
| 1.2 | நான்கு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 75 |
| 1.3 | மூன்று நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 50 |
| 1.4 | இரண்டு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 35 |
| 1.5 | ஒரு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 20 |

*2. இதற்கான இவ்வட்டவணையின் வகுதி I இன் விடயம் I இல் குறித்துரைக்கப்பட்ட விலைகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்:-*

*2.1 வகுதி I இன் விடயம் I இல் குறித்துரைக்கப்பட்ட விலைகள் இருபத்து நான்கு மணித்தியால காலப்பகுதியொன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும் என்பதுடன் வழங்கப்படக்கூடிய வேறு எவையேனும் சேவைகளுக்கான அல்லது வசதிக்கான சேவைக் கட்டணங்கள் மற்றும் வேறு ஏற்புடையற்பாலனவான வரிகள், கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகளை தவிர்த்தலும் வேண்டும்.*

*2.2 குறுகிய கால அலுவல்களுக்கான (ஒரு மாதத்திற்குக் குறைவான) வதிவிட/இருப்பிடக்கூறு ஹோட்டல்களின் விடயத்தில், இரட்டை இருப்பாட்சியாண்மைக்கு மேலாக மேலதிக விருந்தினர் ஒருவருக்கு பதினைந்து ஐஅ டொலர்கள் அல்லது அதற்குச் சமமாக இலங்கை ரூபாவில் மேலதிக விதிப்பனவொன்று அறிவடப்படுதல் வேண்டும்.*

வகுதி II

*1. கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளுக்கான விலைகளுக்காக வகுதி I விலைகளின் மீது 20% தரகு செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.*

*2. பொழுதுபோக்குக்கான விலைகளுக்காக வகுதி I விலைகளின் மீது 10% தரகு செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.*

வகுதி III

*1. வானூர்தித் தொகுதியினர் அறைகளுக்கான விலைகள் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் (ஐஅடொ) அல்லது அதற்குச் சமமான இலங்கை ரூபாவில் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-*

| | | | ஐஅடொ |
|---|---|---|---|
| 1.1 | ஐந்து நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 75 |
| 1.2 | நான்கு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 55 |
| 1.3 | மூன்று நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 40 |
| 1.4 | இரண்டு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 30 |
| 1.5 | ஒரு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | - | 20 |

2. வகுதி III இன் விடயம் I இல் குறித்துரைக்கப்பட்ட விலைகள் இருபத்து நான்கு மணித்தியால காலப்பகுதியொன்று டொர்பில் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும் என்பதுடன் வழங்கப்படக்கூடிய வேறு எவையேனும் சேவைகளுக்கான அல்லது வசதிக்கான சேவைக் கட்டணங்கள் மற்றும் வேறு ஏற்புடையற்பாலனவான வரிகள், கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகளை தவிர்த்தலும் வேண்டும்.

## வகுதி IV

1. வதிவிட விருந்தினர்களுக்கு மட்டுமான உணவு விலைகள் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் (ஐஅடொ) அல்லது அதற்குச் சமமான இலங்கை ரூபாவில் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

| | | காலையுணவு<br>ஐஅடொ | பகலுணவு<br>ஐஅடொ | இரவுணவு<br>ஐஅடொ |
|---|---|---|---|---|
| 1.1 | ஐந்து நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 10 | 15 | 17 |
| 1.2 | நான்கு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 09 | 14 | 16 |
| 1.3 | மூன்று நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 08 | 10 | 14 |
| 1.4 | இரண்டு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 06 | 08 | 10 |
| 1.5 | ஒரு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 05 | 07 | 09 |

2. வகுதி IV இன் விடயம் I இல் குறித்துரைக்கப்பட்ட விலைகள் இருபத்து நான்கு மணித்தியால காலப்பகுதியொன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும் என்பதுடன் வழங்கப்படக்கூடிய வேறு எவையேனும் சேவைகளுக்கான அல்லது வசதிக்கான சேவைக்கட்டணங்கள் மற்றும் வேறு ஏற்புடையற்பாலனவான வரிகள், கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகளை தவிர்த்தலும் வேண்டும்.

## அட்டவணை II

1. மீள்பதிவு மற்றும் உரிமமளித்தலுக்கு செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் ரூபாவில் (ரூபா.) பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

| | | மீள்பதிவுக் கட்டணம் (ரூபா.) | உரிமமளித்தல் கட்டணம் (ரூபா.) |
|---|---|---|---|
| 1.1 | ஐந்து நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 3,000,000 | 2,000,000 |
| 1.2 | நான்கு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 2,300,000 | 1,500,000 |
| 1.3 | மூன்று நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 1,850,000 | 1,200,000 |
| 1.4 | இரண்டு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 1,500,000 | 1,000,000 |
| 1.5 | ஒரு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் | 1,100,000 | 750,000 |

EOG 09-0094

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.